**இலங்கை ஹதபிம அதிகாரசபை - 2024**

-----------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஹதபிம அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்விற்கு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்களும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ள தாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபை செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5. நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டில் காசு மற்றும் காசுக்கு சமமான வெளிப் பாய்ச்சல் மற்றும் உட்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 27 மற்றும் 28 ஆம் பந்திகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. | அடுத்த ஆண்டில் நிதிக் கூற்றுகள் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். |

#### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2001–2010 காலப்பகுதிக்குரிய மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதிய ரூபா 4,213,582 நிறுத்தி வைத்த இலாபத்திற்கு சீராக்கம் செய்யாமல் | செலவினம் நிச்சயமாக அவ்வாண்டில் இனங் கானப்படாததால் அப்பெறுமதியை | அடுத்த ஆண்டு காலப் பகுதியில் செலவினம் இனங்காணப்பட்டு சரியாக கணக்கீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் செலவினமாக சீராக்கியதன் காரணமாக மீளாய்வாண்டு மிகை அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டு இருந்தது. | கொடுப்பனவிற்காக தொழில் திணைக்களத்திடமிருந்தும் தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்தும் உரிய தீர்மானங்கள் கிடைத்துள்ளதாகவும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் 2024 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டுள்ள துடன் செலவினமாக 2024 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட நிலையான வைப்பு வட்டி வருமானம் மற்றும் பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கணிப்பிடலின் பெற்றுக் கொண்ட இறுதி பெறுமதியுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 2,829,425 மற்றும் ரூபா 3,899,814 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கை தயாரிக்கும் போது நிலையான வைப்புக்கள் வட்டி வருமானம் மற்றும் பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானமாக வைப்புக் காலப்பகுதி எல்லைக்கு மாத்திரம் எடுத்து கணக்கிடப்பட்டமை மற்றும் ஆண்டுக்காக பகிரப்பட்டு கணக்கிடல் தவறி உள்ளதாக. | இணக்கமின்மை பரீட்சிக்கப்பட்டு சரியான பெறுமதிகள் நிதி கூற்றுக்களில் சீராக்கம் செயற்பட வேண்டும். |
| (இ) | 2024 ஜனவரி மாதத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த அரசின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 95,155,000 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுகளில் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 43,330,620 என காண்பிக்கப்பட்டமையால் ரூபா 51,824,380 இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டில் கட்டிட மதிப்பீட்டு பெறுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக உள்ளக அறிவித்தல் ஒன்று இடம்பெறாமை காரணமாக கட்டிடங்களின் பெறுமதி குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளதாக. | - மேற்படி - |
| (ஈ) | அதிகார சபையால் மத்திய பொறியியலாளர் சேவைகள் கம்பெனி (CESL) உடன் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் உள்ள பள்ளேகல பண்ணை 2024 ஏப்ரல் 02 ஆம் திகதி நிர்மாணிக்கப்பட்ட ரூபா 26,853,829 கிரயமான கோழி கூடுகளுக்குரிய ரூபா 502,130 ஆன பெறுமானத் தேய்வுப் பெறுமதி கணக்கீடு செய்யப்படாமை காரணமாக மீளாய்வாண்டு இலாபம் அப்பெறுமானத்தால் கூடுதலாகவும் பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு அப்பெறுமானதால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறுமானத்தேய்வு பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அது Excel sheet இல் மொத்த கூட்டுத்தொகையினை எடுக்கும் போது அந்நிரல் கூட்டுவதற்கு தவறியுள்ள தாக. | சரியாக கணக்கிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | மத்திய பொறியியலாளர் சேவை கம்பெனி உடன் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் பங்களிப்பு அடிப்படையில் மேற் கொள்ளப்படும் செயற்பாடு களின் | கட்டிடங்கள் மாத்திரம் சொத்துக்களாக இனங்காண பட்டத்துடன் அதன் அதில் காணப்படுகின்ற நடைமுறை | நடைமுறை வேலைகளை கணக்காய்வில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் இறுதி தேர்தல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 15,935,828 ஆன நடைமுறை வேலைகளின் பெறுமதி அதிகார சபையின் சொத்துக்களாக மற்றும் கம்பெனிக்குரிய கடப்பாடு களாக நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | வேலை பெறுமதி சரியாக பெறுமதியை சரியாக்கு வதற்கு நடவடிக்கை எடுப்பட்டுள்ளதாக. | வேண்டும் |
| (ஊ) | மீளாய்வாண்டில் CESL செயற்திட்டத்தின் இலாபம் ரூபா 3,557,543 ஆக இருந்ததுடன் ஹதவிம அதிகார சபை மற்றும் திட்டத்திற்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் அடிப்படை ஒன்றின் பிரகாரம் இலாபத்தை விகிதாரசாரமாக பகிர்ந்து கொள்ள வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அதற்காக எவ்வித ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் CESL திட்டத்துக்குரிய சட்டமா அதிபர் திணைக்களிடம் இருந்து அங்கீகாரம் கிடைத்த பிரதான உடன்படிக்கை 2025 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் கைச்சாத்திடப்பட்டது 2025 ஆம் ஆண்டில் பிரதான உடன்படிக்கையின் பிரகாரம் மற்றும் அந்த அங்கீகாரங்களின் பிரகாரம் இலாபத்திற்காக ஒதுக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக. | நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் போது சரியான பெறுமதி இனங்காணப்பட வேண்டும். |
| (எ) | 3 கம்பெனிகளால் அதிகார சபையுடன் 2024 ஜனவரி 05 ஆம் திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சோள இறக்குமதி உடன்படிக்கையின் பிரகாரம் நிர்வாக மற்றும் தொழிற்பாட்டு கட்டணங்களாக ரூபா 15,250,000 தொகை ஒன்று 2024 ஜனவரி 08 ஆம் திகதி திகதி வைப்புச் அதிகார சபையில் வைப்புச் செய்யப்பட்டு இருந்தது எனினும் அப்பெறுமதி 2023 ஆம் ஆண்டின் நிதி கூற்றுகளில் சோளத் திட்டத்தின் வருமானமாக இனங்கானப்பட்டு பெறவேண்டிய வருமானமாக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்தது. | அவதானிப்பை ஏற்றுக் கொள்வதாக. | வருமானம் சரியாக இளங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதாக உறுதிப்படுத்தும் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும் |
| (ஏ) | 2024 ஆம் ஆண்டில் சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அதிகார சபைக்கு உரித்தாக இருந்த பங்கீட்டை பயன்படுத்தி அதிகாரசபையால் கம்பெனிகளில் இருந்து பெற்றுக்கொண்ட நிர்வாக மற்றும் தொழிற்பாட்டு கட்டணங்களில் அதற்குரிய செலவினத்தை கழித்த பின்னர் தேறிய வருமானம் ரூபா 102,499,264 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுகளில் அவ் வருமானம் ரூபா 117,371,077 என காண்பிக்கப்பட்டதால் ரூபா 14,871,813 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | பெறுவனவு மற்றும் கொடுப்பனவு ஆகிய இரண்டும் ஒரே கணக்குகளில் கணக்கு வைத்தமை இடம்பெற்றதால் வருமானம் கூடுதலாக காண்பிக்க நேர்ந்ததாக. | இணக்கமின்மை சீராக்கப்பட்டு கணக்கு மீதிகளை சரியாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | தெரிவு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் மற்றும் செலவினம் ரூபா 287,838 குறைத்து கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் அப்பெறுமதியால் ஆண்டின் வருமானம் கூடுதலாகவும் பொறுப்பு குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் அட்டுறு செலவினம் கணக்கீடு செய்தல் 2025 சனவரி 31 ஆம் திகதியில் முடிவடைந்து இருந்ததுடன் அதற்கு பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட செலவினங்களை கணக்கீடு செய்தல் இடம் பெறவில்லை என்பதாக. | கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து முறையாக சீராக்கி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஒ) | அதிகார சபைக்கு சொந்தமான வங்கி சேமிப்பு கணக்கில் 2024 திசெம்பர் 31 உள்ளவாறு மீதி வங்கி உறுதிப்படுத்தலின் பிரகாரம் ரூபா 4,041,152 ஆகவும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 558,648 மற்றும் காசேட்டின் பிரகாரம் ரூபா 4,605,330 இருந்ததால் மீதிகளில் இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்ட துடன் அவ்வேறுபட்டை தீர்வு செய்வதற்கு கணக்காய்வு திகதியான 2025 மே 05 ஆம் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டு களிலிருந்து காண்பிக்கப் படும் வேறுபாடுகளை கண்டுபிடித்து சீராக்குவதற்கு 2025 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுப்பதாக | முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு இணக்கமின்மைக்கு காரணங்களை வெளிப் படுத்தி முறையான அங்கீகாரத்தின் கீழ் சீராக்கம் செய்ய வேண்டும் |
| (ஔ) | மத்திய பொறியியலாளர் சேவைகள் (CESL) கம்பெனியுடன் செயற்படுத்தப்படும் திட்டத்தின் கொடுப்பனவு பதிவேட்டில் மின்சாரம் மற்றும் நீர் செலவின தலைப்பின் கீழ் எவ்வித செலவினமும் மாதாந்தம் பதிவு செய்யப்படாமல் இருந்ததுடன் முறையான அடிப்படை ஒன்று இல்லாமல் மீளாய்வாண்டின் இறுதியில் நாட்குறிப்பு பதிவு மூலம் திட்டத்தின் மின்சார செலவினம் ரூபா 1,711,775 ஆகவும் நீர் செலவினம் ரூபா 80,250 ஆகவும் நிதிக் கூற்றுக்களில காண்பிக்கப்பட்டிருந்தன. மேலும் பள்ளேகல பண்ணை மற்றும் CESL திட்டத்தின் வருமானம் வெவ்வேறாக மாதாந்தம் இனங் காண்பதற்கு முறையான அடிப்படை ஒன்று தயாரிக்காமல் ஆண்டின் இறுதியில் நாட்குறிப்பு பதிவு ஒன்று மூலம் செயற்திட்டத்தின் வருமானமாக ரூபா 26,996,814 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆரம்பக் கிரயம் வருமான விகிதத்திற்கு இணங்க பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் செயற் திட்டத்தில் விற்பனைக்காக வழங்கப்பட்ட பட்டியல்களில் வருமானம் தலைமை அலுவலகத்தில் கணக்கீடு செய்யப்பட்டுள்ள மூலாதார ஆவணங்கள் பயன்பாட்டு ஆவணங்கள் மற்றும் அறிக்கையின் பிரகாரம் இணக்கம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக | செயற்திட்டத்தின் வருமானம் மற்றும் செலவினங்கள் வெவ்வேறாக இனம் காணும் நடைமுறை ஒன்று நிறுவப்பட வேண்டியதுடன் உரிய பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் கணக்காய்வுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை**

| | **விடயம்** | **நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி** ரூபா | **அண்மித்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி** ரூபா | **வேறுபாடு** ரூபா | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|---|
| (அ) | நிலையான வைப்புக்கள் பெறுமதி | 108,184,532 | 109,257,787 | 1,073,255 | பெறுமதிக்காக ஆரம்ப முதலீட்டு பெறுமதி எடுக்கப்பட்டுள்ளதுடன் அம் முதலீட்டு முதிர்வடையும் போது வட்டியுடன் புதிய பெறுமதியுடன் பெறுமானத்தைப் பதிவு செய்வதில் தவறி உள்ளதாக | இணக்கமின்மை இனங் காணப்பட்டு எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கி பெறுமதியை இணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வாயு ரைபல் மற்றும் மின் வேலிகளை வழங்கு வதற்கான செலவினம் | 13,047,297 | 19,997,683 | 6,950,386 | 2024-12-31 இல் காணப்படும் இருப்புப் பெறுமதி இருப்பு கணக்கு வரவு வைக்கப்பட்டு உரிய தலைப்புகளில் செலவுக் கணக்கு செலவு வைத்த காரணத்தினால் செலவினம் குறை வடைந்துள்ளதாக. | - மேற்படி - |
| (இ) | பள்ளேகலை பண்ணை விற்பனை வருமானம் | 36,545,788 | 18,742,845 | 17,802,943 | காசேட்டின் பிரகாரம் பள்ளேகலை பண்ணையில் விற்பனை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் பண்ணை வருமான பதிவேட்டின் பிரகாரம் கணக்கீடு செய்யப் படவில்லை என்பதாக. | இணங்கா மைக்கு காரணத்தை கண்டுபிடித்து பண்ணை வருமான பதிவேடு சரியாக பேணி செல்லாமை தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பதிவேடுகளை நாளாவதுவரை யாக யாக்கி பேணிச் செல்வதற்கு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஆலோசனை வழங்கப்பட வேண்டும். |
| (ஈ) | மத்திய பொறியியலாளர் சேவை கம்பனி (CESL) உடன் செயற்படுத்திய திட்டத்தின் விற்பனை வருமானம் | 26,996,815 | 4,695,223 | 22,301,592 | காசேட்டின் பிரகாரம் CESL திட்டத்தில் விற்பனை வருமானம் கணக்கீடு செய்யப் பட்டுள்ளதுடன் CESL திட்டத்தின் வருமான பதிவேட்டின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வில்லை என்பதாக. | - மேற்படி - |
| (உ) | கொத்மலை பண்ணை விற்பனை வருமானம் | 21,048,896 | 1,091,448 | 19,957,448 | காசேட்டின் பிரகாரம் கொத்மலை பண்ணை விற்பனை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் பண்ணை வருமான பதிவேடு பதிவேட்டின் பிரகாரம் கணக்கீடு செய்யப் படவில்லை என்பதாக. | - மேற்படி - |
| (ஊ) | CESL திட்டத்தின் நாளாந்த தொழிலாளர் சம்பளம் | 2,948,535 | 2,693,307 | 255,228 | ஜனவரி மாதத்திற்குரிய நாளாந்த தொழிலாளர் சம்பளம் CESL திட்டத்தின் கொடுப்பனவு பதிவேட்டில் பதிவு செய்யப்படாமல் பள்ளேகலை பண்ணையின் கெடுப்பனவு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக. | இணக்கமின்மைக்கு காரணத்தை கண்டுபிடித்து சரிப்படுத்துவதற்கும் பதிவேடுகளை முறையாகவும் சரியாகவும் பேணிச் செல்வதற்கு உள்ளக வேலை திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | CESL திட்டத்தின் மத்திய பொறியியலாளர் சேவை தனியார் நிறுவனத்தினால் ஈடுபடுத்தப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி | 88,067,247 | 87,386,371 | 680,876 | CESL நிறுவனத்தின் மூலம் எவ்வித மீதி உறுதிப்படுத்தல் பெற்றுக் கொண்டு சொத்துக்களின் பெறுமதி கணக்கு வைத்தல் இருக்கவில்லை என்பதாக. | CESL நிறுவனத்தின் புத்தகங்கள் அதிகார சபையின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் ஒன்றுடன் ஒன்று ஒப்பிடப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களின் உள்ளடக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெற வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுக்குரிய ஹதபிம கூட்டுறவு சங்கத்திலிருந்து பெறவேண்டிய ரூபா 1,262,400 ஆன வாடகை வருமானம் நீண்ட கால சொத்தொன்றாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | காலப்பகுதிக்காக ஒதுக்கீடு செய்து கணக்கு வைக்கும் போது இடம்பெறும் பதிவுகள் செய்யும் தவறு ஒன்றாக | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள் / பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 110 | வாகன விபத்துக்கள், விவசாய காணிகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் மற்றும் விலங்குகளின் இறப்பு போன்ற சேதங்கள் மற்றும் இழப்புகளைப் பதிவு செய்ய சேதம் மற்றும் இழப்பு பதிவேடு ஒன்று பராமரிக்கப்பட்டிருக்க வில்லை. | அதிகாரசபையின் பண்ணையின் விலங்குகள் மற்றும் பயிர் செய்கை காணிகளின் ஏற்படும் இழப்புகள் மற்றும் சேதங்கள் பதிவு செய்யம் பதிவேட்டு பேணிச் செல்லப்பட்டு வருவதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் இழப்புகள் மற்றும் சேதங்களின் பதிவேட்டை பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நி.பி 137 மற்றும் 138 | உறுதிச்சீட்டுக்களை அங்கீகரித்து சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்கள், | பொருட்களுக்கு காசோலைகள் எழுதப்பட்டிருந்த போதிலும், | முறையான பரிசோதனை நடத்தி நிதிப் பிரமாணங்களுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நி.பி பிரிவுகளிலிருந்து விலகி கொடுப்பனவுகளை அங்கீகரித்து காசோலைகளை எழுதி நிறுத்தி வைத்திருந்தமை காரணமாக 150 வாயு ரைபிள்களை கொள்வனவு செய்வதற்காக 2023 திசெம்பர் 28 ஆந் திகதி வழங்குனரின் பெயரில் எழுதப்பட்ட ரூபா 3,727,500 பெறுமதியான காசோலை 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், எந்த செயற்பாட்டினையும் செய்யாமல் பணம் செலுத்துவதற்கான உறுதிச்சீட்டுக்களைத் தயாரித்து அங்கீகாரம் அளித்ததிருந்தமையால் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி எழுதப்பட்ட ரூபா 8,561,213 பெறுமதியான 08 காசோலைகள் கணக்காய்வு செய்யப்பட்ட 2025 மே 05 ஆந் திகதி அளவிலும் பணம் பெறுனர்களுக்கு வழங்கப்படாமல் அதிகாரசபையால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | வழங்குனர்கள் பொருட்களை வழங்கிய வரை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அவற்றை முறையாக ஆய்வு செய்யும் வரை மேற்கூறிய காசோலைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | முரணாக செயற்பட்ட உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் இந்த நிலைமை ஏற்படாமல் தவிர்ப்பதற்கு ஒரு வேலைத் திட்டமொன்றை செயல்படுத்த வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 396 | இரண்டு நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக 2024 திசெம்பரில் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்க கூற்றில், 06 முதல் 17 மாத காலப்பகுதியில் வழங்கப்பட்ட ஆனால் 2025 மே 05 வரை பணம் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படாத மொத்தம் ரூபா 2,117,323 பெறுமதியான 48 காசோலைகள் நிதிப் பிரமாணகளின் பிரகாரம் நடவடிக்கை | வாடிக்கையாளருக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக 2024 திசெம்பர் 31 இல் நிலுவையில் உள்ள காசோலைகளில் ரூபா 908,908 28.02.2025 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தீர்வு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கப்படவில்லை. | | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) | நிதியாண்டு முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 50 நாட்களுக்கு மேற்பட்ட தாமதத்தின் பின்னர் 2025 ஏப்ரல் 21 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) பிரகாரம் 2025 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக | அடுத்த ஆண்டுகளில் உரிய காலத்தில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் வகையில் உள்ளக வேலைத்திட்ட மொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | பொது நிர்வாக சுற்றறிக்கை 30/2016 | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு சோதனைகள் 12 மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டிய போதிலும், 2024 ஆம் ஆண்டு முழுவதும் எரிபொருள் எரிவு சோதனைகள் நடத்தப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டிலும் வாகன எரிவு சோதனை நடத்தப்பட்டதுள்ளது டன் இந்த பரிசோதனை 2023 ஆம் ஆண்டின் இறுதியில் நடத்தப்பட்டதால், 2024 ஆம் ஆண்டிற்கு மீண்டும் ஒரு பரிசோதனை நடத்தப்படவில்லை என்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரிசோதனைகள் நடத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 165,438,685 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 57,991,050 ஆக இருந்தமையால் மிகையில் ரூபா 107,447,635 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் இந்த அதிகரிப்பிற்கு சோளம் மற்றும் உழுந்து இறக்குமதி செயற்திட்டத்தின் வருமானம் பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஜூலை 04 ஆந் திகதி வழங்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி, உள்நாட்டு முட்டை மற்றும் கோழி உற்பத்தியை அதிகரிக்கவும் விலைகளைக் கட்டுப்படுத்தவும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், | ஹதபிம அதிகாரசபை திறைசேரியின் நிதியில் இயங்கும் ஒரு நிறுவனம் என்பதால், இவ்வாறான இறக்குமதி நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு நிதி ஏற்பாடு இல்லை | முறையான விசாரணை ஒன்றை நடத்துவதற்கும் எந்தவொரு சாத்தியமான ஊழல் அல்லது துஷ்பிரயோக நிலைமை ஒன்று |

| | | | |
|---|---|---|---|
| | அத்திணைக்களத்திற்கு கிடைத்த பங்கீட்டில் ஹதபிம அதிகாரசபைக்கு 2023 ஆம் ஆண்டில் 21,250 மெற்றிக் தொன் மற்றும் 2024 ஆம் ஆண்டில் 25,000 மெற்றிக் தொன் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், ஹதபிம அதிகாரசபையின் நிதியைப் பயன்படுத்தி சோளத்தை இறக்குமதி செய்து கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் அளவுகோல்களின் படி விநியோகிக்க நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் அதிகாரசபைக்க கிடைத்த பங்கீட்டின் கீழ் சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அதிகாரசபையால் தற்றுணிவின் பேரில் தெரிவுசெய்யப்பட்ட மூன்று தனியார் இறக்குமதியாளர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக ரூபா. 130,550,000 தரகுத் தொகையினைப் பெற நடவடிக்கை எடுத்திருந்தது. அதன் பிரகாரம் அதிகார சபைக்கு வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி, இறக்குமதி நடவடிக்கைகளுக்காக ஒரு தற்காலிக பெறுமதி சேர் வரி இலக்கமும் பெற்றுக் கொள்ளப்பட்டு தனியார் நிறுவனங் களிடமிருந்து அதிகார சபையின் வங்கிக் கணக்கில் பணம் வைப்புச் செய்யப்பட்டு இறக்குமதி செலவுகள் அதிகார சபையின் வங்கிக் கணக்கு மூலம் செலுத்தப்பட்டு, பொருட்கள் விடுவிக்கப்பட்டு மூன்று தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் சிறு அளவிலான கால்நடை உணவு உற்பத்தியாளர்களுக்கு விநியோகிப்பதற்கான ஒதுக்கீட்டை வழங்கியிருந்த போதிலும், சோளம் விநியோகம் தொடர்பாக நிறுவனம் சமர்ப்பித்த பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பண்ணைகள் நடுத்தர மற்றும் பெரிய அளவிலானவை என்பதும் 10,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்த இறக்குமதியாளரின் விநியோகப் பட்டியலைச் பரீட்சித்த போது, பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த பண்ணைகளுக்கும் தொடர்புடைய இறக்குமதி கம்பனியால் சோளத்தை வழங்கவில்லை என்பதும் 2024 ஒக்டோபர் 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள ஆய்வின் போது,கண்டறியப்பட்டது. | யென்பதால் மேலும், பதிவு செய்யப்பட்ட இறக்குமதி யாளர்களிடமிருந்து விண்ணப்பங்களை நிறுவனம் கோரியிருப்பதால் தொடர்புடைய இறக்குமதி நடவடிக்கைகள் ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதிகாரசபையின் பெயரில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. Consignee ஆக அதிகார சபையையும், இறக்குமதி மற்றும் விநியோக நிறுவனம் அறிவிப்பு தரப்பினராகவும் Notify Party கொண்டு, சுங்கத்திலிருந்து பொருட்களை விடுவிப்பதற்கு தற்காலிக வெட் பதிவொன்று பெறப்பட்டுள்ள துடன். தொடர்புடைய பண்ணைகளை சிறிய மற்றும் நடுத்தர அளவிலானவை என வகைப்படுத்தி ஒழுங்கு படுத்துவதற்கு அதிகார சபையிடம் தகவல் இல்லாததால், பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பண்ணைகளுக்கு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது என்பது மாத்திரம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளதுடன், அந்த ஆவணங்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதாக. | இருக்குமாயின் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும் ஒரு சட்ட அமலாக்க நிறுவனத்திற்கு அறிக்கை இடப்பட வேண்டும். |
| (ஆ) | 2024 ஆம் ஆண்டு சிங்கள மற்றும் இந்து புத்தாண்டு காலப்பகுதியில் தோட்டத்துறையில் உள்ள தமிழ் மக்களுக்கு தேவையான 500 மெற்றிக் தொன் பாசிப் பயறை இறக்குமதி செய்ய மத்திய விவசாய அமைச்சு ஹதபிம அதிகாரசபைக்கு அனுமதி அளித்தது. ஹதபித | அதிகாரசபையிடம் நிதி இல்லாததால், பதிவு செய்யப்பட்ட இறக்குமதி யாளர்களிடமிருந்து விருப்பங்களை அழைப்பதன் மூலம் இறக்குமதி | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரசபை அதன் சொந்த நிதியிலிருந்து பயறினை இறக்குமதி செய்யவில்லை, மேலும் இறக்குமதி ஆவணங்களில் ஹதபித அதிகாரசபையின் பெயரைப் பயன்படுத்தி குறிப்பிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தனியார் நிறுவனமொன்றின் நிதியைப் பயன்படுத்தி பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு பொருட்களை அந்த நிறுவனத்திற்கு வழங்கி அதிகாரசபையால் ரூபா 8,000,000 ஆன தரகு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.<br>சிங்கள மற்றும் இந்து புத்தாண்டுக்கு தேவையான உழுந்தினை இறக்குமதி செய்ய அமைச்சரவை அங்கீகாரம் அளித்த போதும் அது இலங்கைக்கு 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி அளவில் இலங்கைக்கு வந்திருக்க கூடும் என்பது தனிமைப்படுத்தல் சேவையின் விண்ணப்பத்தில், குறிப்பிடப்பட்டிருந்தது. சிங்கள மற்றும் இந்து புத்தாண்டு கால தேவைக்காக பயறு இறக்கமதி செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த போதும் நோக்கத்திற்கு முரணாக பண்டிகாலம் முடிவடைந்து 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி முதல் 2024 மே 03 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், பயறு களஞ்சியங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு, புறக்கோட்டை மொத்த வியாபாரிகளுக்கு கொண்டு செல்லப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டதுடன் இந்த இறக்குமதி நடவடிக்கைக்கான அங்கீகாரம் 2024.04.03 ஆந் பெறப்பட்டதால் கேள்வி நடைமுறையைப் பின்பற்றி இறக்குமதி நடவடிக்கை களை மேற்கொள்ளவும் 09 நாட்களே காணப்பட்டது. அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம், இறக்குமதிக்கு மாத்திரமே அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டிருந்ததுடன் விநியோகத்திற்கான எந்த அறிவுறுத்தல்களும் வழங்கப்படவில்லை. அதன் பிரகாரம் தொடர்புடைய பொருள் இறக்குமதி யாளரால் பொருட்களை தடுத்து வைத்துக் கெள்ளாமல் இருப்பதன் பொருட்டு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை சந்தைக்கு வழங்குதமாறு அதிகாரசபை கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் இறக்குமதியாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | |
| (இ) | வாயு ரைபிள் கொள்வனவு திட்டத்தின் கேள்வி ஆவணங்களின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வழங்குனருடன் இனங்ப்பட்ட விநியோக காலமம் 25 நாட்கள் ஆகும், ஆனால் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 150 வாயு ரைபிள்களுக்கான விசேட திட்டத்தின் வாயு ரைபிள்களை வழங்க 04 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. மேலும், . இது தொடர்பாக அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணங்கள் பற்றிய தொடர்பாக எவ்வாறான குறிப்பொன்றையும் கேள்வி நிபந்தனைகளில் குறிப்பிடப்படததால் தாமதித்த வழங்குனர் மீது நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை வரும் வரை எந்த காசோலை களும் வழங்கப்படவில்லை எனவும் செயலாற்றல் பாதுகாப்பு பிணை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும். | எதிர்காலத்தில், கேள்வி ஆவணங்களைத் தயாரிப்பதில் உள்ள குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கும், வழங்குனர்களைத் தேர்ந்தெடுப்பதில் பொருத்தமான வழங்குனரைப் பெறுவதற்கான அளவுகோல்களை மேலும் விரிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | களஞ்சிய பதிவேட்டின் பிரகாரம் 2025 ஏப்ரல் 7 ஆந் திகதி 10 வாயு ரைபில்கள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பௌதீக பரிசோதனையின் பிரகாரம் 3 வாயு ரைபில்கள் இருந்தன. 07 வாயு ரைபில்கள் பற்றாக்குறையாக இருந்தன. | 08 வாயு ரைபில்கள் 50% பங்களிப்பு செய்த பயனாளிகளுக்கு நேரடியாக வழங்கப்பட்டதாக. | 7 வாயு ரைபில்களின் விநியோகம் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (உ) | திருத்தப்பட்ட பாதீட்டிற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீளாய்வாண்டு முடிவடைந்து 2025 ஜனவரி 10 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டதால் உண்மையான செலவினங்களின் அடிப்படையில் திருத்தப்பட்ட பாதீட்டை தயாரித்து பாதீட்டில் எந்த மாறுபாடும் ஏற்படவில்லை என்பதைக் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்திற்கான பணிப்பாளர் சபை கூட்டம் ஜனவரி மாதத்தில் நடைபெற்றதுடன் 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஒதுக்கப்பட்ட பாதீட்டு எல்லை மீறப்படாமல் இருந்ததுடன் செலவினத் திட்டங்களுக்கு இடையில் மாத்திரமே செலவு எல்லைகள் திருத்தம் செய்யப்பட்டதாக | எதிர்காலத்தில் உரிய நேரத்தில் பாதீட்டை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | அதிகாரசபையால் உத்தியோகத்தர் ஊதியம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அரசாங்க மூலதன மற்றும் மீண்டெழும் மானியங்களை முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் 2024 ஆம் ஆண்டில் மீண்டெழும் மானியங்களாக ரூபா 149,655,800 மற்றும் மூலதன மானியங்களாக ரூபா 220,000,000 கிடைத்திருந்தது. அதிகாரசபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட கோதுமை மற்றும் உழுந்து இறக்குமதி திட்டங்கள் மூலம் தரகாக ரூபா 138,550,000 வருமானம் ஈட்டப்பட்ட போதிலும், பொது திறைசேரியிலிருந்து அதிகாரசபைக்கு வழங்கப்படும் மானியங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அதிகாரசபையின் அபிவிருத்தி மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்கான வருடாந்தம் வழங்கப்படும் நிதியம், அந்தந்த நோக்கங்களை முழுமையான முறையில் நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அதிகாரசபையின் பண்ணைகளுக்கு வருடாந்த மதிப்பீடுகள் மூலம் ஒதுக்கீடுகள் செய்யப்படாததால், விவசாய நடவடிக்கைகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு நிதியம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள நிதிகள் சந்தையில் அதிக வட்டி விகிதத்தில் வர்த்தக வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக. | அதிகாரசபையின் வருமானத்தை பகுப்பாய்வு செய்து அதன் பிரகாரம் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளும் ஒதுக்கீட்டைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | ஒரு அரச நிறுவனம் என்ற முறையில், வருடாந்த அனுமதிக்கப்பட்ட பாதீட்டு எல்லைகளுக்குள் நிறுவனத்தின் நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டிய போதிலும் உளுந்து மற்றும் சோளம் இறக்குமதியாளர்களிடமிருந்து பெறப்படும் ரூபா 138,550,000 ஆன தரகுப் பணத்தில் அதிகாரசபையினால் ஊழியர்களின் கடன் வழங்குவதற்கான சுழற்சி நிதியத்திற்கு ரூபா 8,000,000 மற்றும் உத்தியோகத்தர்களுக்கான டேப் கணனிகள் கொள்வனவு செய்வதற்கு | டெப் கணனிகளை கொள்வனவு செய்வதற்கு சோளம் நிதியிலிருந்து பணம் செலவிடப்பட்ட தாகவும், அரச உத்தியோகத்தர்களுக்கு ஆண்டு தோறும் கடன் வழங்குவதற்கு கட்டுநிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் எங்கள் அதிகார சபை போன்ற நியதிச்சட்ட | பாதீடு அங்கீகாரத்திற்கு புறம்பாக செலவினங்களை மேற்கொள்வது தொடர்பாக முறையாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 5,799,936 தொகை அனுமதிக்கப்பட்ட ஆண்டு பாதீட்டு எல்லையை மீறி செலவிடப்பட்டிருந்தன. | நிறுவனங்களுக்கு வருடாந்த நிதி ஒதுக்கப்படவில்லை என்பதால் கடன்கள் உள்ளக ரீதியில் நிறுவப்பட்ட சுழற்சி நிதியத்தின் மூலம் கடன்கள் செலுத்தப்படுவதுடன் அதற்கான எல்லைகள் மற்றும் நிபந்தனைகளை உருவாக்கி, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு கடன்கள் வழங்கப்படுகின்றன என்பதாகவும் | |
| (ஏ) | அதிகாரசபையின் விற்பனைப் பிரிவில் 2015 ஆம் ஆண்டு நடந்த ஒரு நிதி மோசடி தொடர்பாக ரூபா 2,129,759 இழப்பு அடையாளம் காணப்பட்டதுடன்இழப்பு ஏற்பட்டு 10 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், 2025 மே 05 ஆந் திகதிய கணக்காய்வு செய்யப்பட்ட திகதியின் பிரகாரம் ரூபா 575,000 மட்டுமே அறவிடப்பட்டிருந்ததுடன் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,554,759 மீதியை அறவிடுவதற்கு ஹதபிம அதிகாரசபை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | அறவீடு தொடர்பாக ஆராய்ந்து பரிந்துரை அறிக்கையைப் பெற ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன், தொடர்புடைய பரிந்துரை அறிக்கையைப் பெற்ற பிறகு அதற்கேற்ப எதிர்வரும்ம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக | இழப்புகளை அறவிடுவதற்கு சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், மேலும் விரைவாக அறவிட வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | வ/ப ஹதபிம கூட்டுறவு சங்கம் என்ற பெயரில் ஒரு கூட்டுறவு சங்கம் ஒன்று நிறுவப்பட்டு மற்றும் ஹதபிம அதிகாரசபையின் கீழ் செயற்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் திட்டத்தின் செயல்பாடுகள் அந்த சங்கத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுறவு சங்கத்தை நிறுவுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் எதுவும் அடையப்படவில்லை, மேலும் ஹதபிம அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய வாடகை மற்றும் பிற கட்டணங்களுக்கு கூட்டுறவு சங்கம் செலுத்தாமல் இருந்தது. மேலும், ஹதபிம அதிகார சபைக்கும் கூட்டுறவு சங்கத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்கனவே 2024 ஜனவரி 22 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. கூட்டுறவு சங்கத்தை நிறுவுவது தொடர்பாக ஒரு வழக்கு நடவடிக்கை ஒன்று உள்ளதுடன் அது கணக்காய்வு திகதியான 2025 மே 05 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படாமையால் ஹதபிம அதிகார சபையால் தொடர்புடைய சொத்திலிருந்து அறவிடக்கூடியதாக இருந்த வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த கூட்டுறவு சங்கத்தில் நடந்த முறைகேடுகள் காரணமாக, அதன் நோக்கங்களை அடைய முடியவில்லை என்றும், ஒப்பந்தத்தின் ஆரம்ப கட்டங்களிலிருந்து ஒப்பந்தங்கள் மீறப்பட்டுள்ளன என்றும், ஒப்பந்தத்திலிருந்து விலகுவதற்கோ அல்லது ஒப்பந்தத்தை மீறுவதற்கோ எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், இது தொடர்பாக கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் தற்போது பல வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. | தற்போதுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் சட்ட நிலைமை குறித்து ஆய்வு செய்து, எதிர்பார்த்த நோக்கங்களை அடைவதற்கும், அதிகாரசபைக்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்வ வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் செயற்பாட்டினை நிறைவேற்றுவதன் கீழ் கொடித் தோடை செய்கையாளர்களுக்கு சொட்டு நீர்ப்பாசன முறைமையை நிறுவுவதற்கு 2023 ஆம் ஆண்டில் ரூபா 14,927,920 செலவில் 70 முறைமைகள் கொள்வனவு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட போதிலும் செடிகள் நடப்பட்ட மூன்று செய்கைய நிலங்களில் சொட்டு நீர் பாசன முறைகள் நிறுவப்படாதிருந்ததுடன் அங்குணகொல பெலஸ்ஸவின் குருவெல பகுதியில் கொடித்தோடை பயிரிடும் நான்கு விவசாயிகள் பல்வேறு காரணங்களைக் கூறி 2024 ஆம் ஆண்டில் சொட்டு நீர்ப்பாசன முறைகளைப் பயன்படுத்துவதை கைவிட்டதால், அதற்காக செலவிடப்பட்ட செலவினம் விளைவற்றதாக இருந்தது. | பயனாளிகளுக்கு சொட்டு நீர்ப்பாசன முறைமை வழங்கப்பட்டு ஒரு மாதத்திற்குப் பிறகு கணக்காய்வு நடத்தப்பட்டிருந்ததுடன் பயனாளிகள் தற்போது சொட்டு நீர்ப்பாசன முறைகளை நிறுவி பயன்படுத்துவதாகவும், அவர்கள் அவற்றைப் பயன்படுத்தாவிட்டால், ஒப்பந்தங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மேற்பார்வையை விரிவுபடுத்தி பயன்படுத்தப்படாத சொத்துக்களை பிற பொருத்தமான தரப்பினருக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், மேலும் முறையான ஆய்வொன்றினை மேற்கொண்டு திட்டங்களை அடையாளம் கண்டு பயனாளிகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நாட்டுக் கோழிகளின் வளர்ப்பினை அதிகரிக்கும் நோக்கில், அதிகாரசபையால் விவசாயிகளுக்கு கோழிக் குஞ்சுகள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், அதன் போது 10 குஞ்சுகளுக்கு விகிதாசாரமாக 02 ஆண் கோழிகளும் 08 பெண் கோழிகளும் விநியோகிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், சில விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ஆண் கோழிகளின் எண்ணிக்கை 46 சதவீதமாக இருந்த சந்தர்ப்பங்கள் இருந்தன. பெறுகை செயற்பாட்டின் போது கேள்விதாரரின் குஞ்சுகளை வழங்கும் திறன் குறித்து எவ்வித வெளிக்கள ஆய்வும் நடத்தப்படாததால், நாட்டுக் கோழிகளை இனப்பெருக்கம் செய்வதற்கான பண்ணை இல்லாத ஒரு பண்ணையிலிருந்து 8615 குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பல்வேறு பண்ணை களிலிருந்து பெறப்பட்ட குஞ்சுகளை வழங்குனர் அதிகாரசபைக்கு வழங்கியிருந்ததுடன், வழங்கப்பட்ட குஞ்சுகளிலிருந்து ரூபா 1,033,600 பெறுமதியான குஞ்சுகள் இறந்ததால் கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அடையப்படவில்லை என்பதை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கோழிகளின் பாலின நிர்ணயம் விவசாய அமைச்சிற்கு சொந்தமான ஒரு வெளிவாரி நிறுவனம் மூலம் மேற்கொள்ளப் படுகின்றதுடன், மேலும் துல்லியமான நிர்ணயம் செய்வதில் உள்ள சிரமம் காரணமாக இந்த சிக்கல் உருவாகி உள்ளதாக. அதிகார சபையால் விநியோகிக்கப்படும் கோழிக் குஞ்சுகள் இறந்தால், அதற்கான கொடுப்பனவுகளை நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அதற்காக 2025 ஜனவரியில் விலங்குகள் விநியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டு உள்ளதாக. | இந்தத் திட்டம் குறித்து முறையான விசாரணை நடத்தப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களை அடையத் தவறியதற்காக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | அம்பாந்தோட்டை பகுதியில் உள்ள ஒரு பண்ணையில் இருந்து 4000 கொடித் தோடை செடிகள், 40 ரம்புட்டான் செடிகள் மற்றும் 2250 ஒட்டுரக துரியன் செடிகளை கொள்வனவு செய்வதற்கான பெறுகை தீர்மானங்கள் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், | நடைமுறை சிக்கலொன்றினால் குறித்த நாற்றுமேடையை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்த போதும் எதிர்காலத்தில் | முறையற்ற பெறுகை நடவடிக்கைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர் கள் மீது முறையான விசாரணை நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | 2024 ஒக்டோபர் 09 ஆந் திகதி கணக்காய்வு நடத்திய வெளிக்கள ஆய்வின் போது வழங்குனரின் பண்ணையில் கொடித் தோடை செடிகள் மாத்திரமே இருந்தன, ஒட்டு ரக துரியன் அல்லது ரம்புட்டான் செடிகள் காணப்படவில்லை. அதன் பிரகாரம் பெறுகை தீர்மானங்ககளை வெளியிடும் போது வழங்குனரிடம் கோரப்பட்ட தாவர வகைகள் உள்ளதா, தாவரங்கள் நல்ல தரமானவையா, கோரப்பட்ட அளவு வழங்க முடியுமா என்பது கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வதாக. | வேண்டும். |
| (ஈ) | 2024 ஆம் ஆண்டில் பழ கிராம திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூபா 29,706,889 ஆகும், மேலும் இந்த திட்டம் ஒரு தேசிய திட்டமாக செயல்படுத்தப்பட வேண்டும் என்றாலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள 03 பிரதேச செயலாளர் பிரிவுகளை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன், மேலும் அந்த விலையில் பெறப்பட்ட ரூபா 3,543,100 பெறுமதியான பொருட்கள் கம்பஹா, குருநாகல் மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. செடிகள் கொள்வனவு செய்யப்பட்டு 3 மாதங்களுக்குள் அடையாளம் காண முடியாத நோய் காரணமாக பயிர்ச்செய்கை சேதமடைந்திருந்தன, மேலும் ஹொரண பழ பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் இது தொடர்பாக விசாரணை நடத்தி சுமார் 06 மாதங்கள் கடந்துள்ள போதிலும், கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2025 ஜுலை 08 ஆம் திகதிக்குள் இறுதி அறிக்கை வெளியிடப்படவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்தின் பலவீனங்களுக்குப் பொறுப்பான தரப்பினரைக் கண்டறிந்து தகுந்த நடவடிக்கை எடுக்க முறையான ஆய்வு நடத்தப்பட வேண்டும். |

## 3.3 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நீர் மூலாதாரங்கள் மற்றும் நீர் மலை பாதுகாப்பு திட்டத்தின் கீழ், ரூபா 970,000 ஒப்பந்தத் தொகைக்கு பிபுலகொடஹேன பிபுல யஹமுல்ல நீர் ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாய கால்வாய் அமைப்பதற்காக 2024- ஜுலை 08 ஆந் திகதி வலஸ்முல்ல பிரதேச செயலகம், ஒரு சமூக அடிப்படையிலான அமைப்போடு ஒப்பந்தம் செய்தது. ஒப்பந்தத்தின் நிபந்தனை இலக்கம் 03 இன் பிரகாரம், ஒப்பந்தம் முடிவடைந்து 2024 ஆகஸ்ட் 08 ஆந் திகதி, பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2024 அக்டோபர் 09 ஆந் திகதி வரை ஒப்பந்தம் காலம் முடிவடைந்து 02 மாதங்கள் | மோசமான வானிலை மற்றும் ஒப்பந்ததாரருக்கும் விவசாயிகள் அமைப்புக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் காரணமாக திட்டம் இரத்து செய்யப்பட்டு, நிதி வேறொரு திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டது என்பதாக. | முறையான விசாரணை நடத்தப்பட்டு, முன்மொழியப்பட்ட நோக்கங்களை அடைய நடவடிக்கை எடுக்காத பொறுப்பான உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கடந்துவிட்ட போதும், திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டோ இருக்கவில்லை.

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழில்நுட்பக் குழுவின் இரண்டு உறுப்பினர்கள் 2023 நவம்பர் 21 ஆந் திகதி அலுவலகத்தில் பணிபுரிந்த போதிலும், ஆந் திகதி அவர்கள் அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவில் 03 சொட்டு நீர்ப்பாசன முறைகளை அவதானித்ததாகவும் மேலும் தொடர்புடைய பொருட்கள் மற்றும் உபகரணங்களை முறையாகப் பயன்படுத்தி பரிந்துரைக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் பணிகள் தயாரிக்கப்பட்டதாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், 2023 நவம்பர் 29 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கூடி, ரூபா 14,927,920 தொகையை செலுத்த பரிந்துரைத்தது. எவ்வாறாயினும், இந்த அறிக்கையைப் பெறுவதற்கு முன்பே, பிரிவுகள் 137 மற்றும் 138 இன் விதிகளிலிருந்து விலகி, 2023 நவம்பர் 24, ஆந் திகதி ஒப்பந்ததாரருக்கு பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உத்தியோகத்தர்களின் பரபரப்பான வேலைப்பளு காரணமாக, ஒரு உறுப்பினர் வெளிக் களத்திற்குச் சென்று ஆய்வு செய்து, வாட்ஸ்அப் செய்தி ஊடகம் மூலம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளதாக. | முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு முறை யற்ற வகையில் நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டுதல் கோவையின் நியதிகளிலிருந்து விலக அதிகாரசபையால் நேரடி கொள்வனவாக ரூபா 25,328,444 பெறுமதியான விவசாய உபகரணங்கள் 2024 சனவரி 01 ஆந் திகதி முதல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் வ.ப வியாபார வர்த்தக கூட்டுத்தாபனத்திடமிருந்து (STC) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | அமைச்சரவை அங்கீகாரம் வழங்குவதற்கு முன்னர் பெறுகை வழிகாட்டுதல் கோவையின் ஆரம்ப கோட்பாடுகள் மீறப்பட்டதை ஏற்றுக் கொள்வதாக | பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் அதிகாரசபைக்கு சாதகமான வகையில் செயற்பட வேண்டும். |
| (இ) | மின்சார கேபிள்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகை செயற்பாட்டில் 2023 நவம்பர் 01 ஆந் திகதி தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர் 1-1.5 ஏக்கருக்கு சமர்ப்பித்த விவரக்குறிப்புகள் மற்றும் 2-2.5 ஏக்கருக்கு சமர்ப்பிக்கப்பட்ட விவரக் குறிப்புகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் கோரப்பட்ட விவரக்குறிப்புகளின் குறைந்தபட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்திரக்கவில்லை. தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை 2024 மார்ச் 08 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த அறிக்கையைப் பெறுவதற்கு முன்பு, நிதிப் பிரமாணங்கள் 136, 137 மற்றும் 138 இன் விதிகளிலிருந்து விலகி, 2023 | பதிலளிக்கப்பட்டிருக்க விலலை. | முறையாக பரீட்சிக்கப் பட்டு முறையற்ற வகையில் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 ஆந் திகதி கேள்விதாரருக்கு அதிகாரசபை ரூபா 1,095,050 தொகையை செலுத்தியிருந்தது. | | |
| (ஈ) | அதிகாரசபையால் 2023/2024 ஆண்டுகளில் 07 சந்தர்ப்பங்களில் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக 1453 வாயு ரைபிள்களை ரூபா 91,650,625 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் 450 வாயு ரைபிள்கள் ரூபா 18,999,925 செலவில் பெறுகை வழிகாட்டுதல்களின் பிரிவு 3.6 (ஈ) இன் படி பெறுகை பெறுமதியில் 50 சதவீதம் மீள் கட்டளையைப் பயன்படுத்தி. முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட அதே வழங்குனரிடமிருந்து 3 சந்தர்ப்பங்களில் 12 முதல் 90 நாட்களுக்குள் கொள்வனவு செய்யப்பட்டன, அதன்படி, தேவையை சரியாக அடையாளம் காணாமல் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது கவனிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் பெறுகை வழிகாட்டுதல்களின் பிரிவு 1.2.1 (அ) இன் பிரகாரம் தரமான பெறுகை திட்டமொன்ற்ன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | தேவையை முறையாகக் இனங்கண்டு பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், மேலும் தரமான பெறுகை திட்டத்தைத் தயாரிக்காத தரப்பினருக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2024 ஆம் ஆண்டு பழக் கிராமத் திட்டத்தின் கீழ் கொடித்தோடை செய்கைக்காக மரக் கன்றுகள், GI குழாய்கள் மற்றும் கல்வனைஸ் கம்பி கொள்வனவு செய்வதற்கு ரூபா 20,523,861 செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் 5,400 GI குழாய்களுக்கு ரூபா 17,765,136 மற்றும் 2,250 Kg கல்வனைஸ் கம்பிக்கு ரூபா 1,048,725 ஒரு தனியார் நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த திட்டத்தின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு ஆவணங்களில் மாதிரிகள் சரிபார்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிடவில்லை.<br>பொருட்களின் விநியோக காலம் 30 நாட்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் குறைந்த விலையைச் சமர்ப்பித்த நிறுவனம் பொருட்களின் விநியோக காலத்தை 45 நாட்கள் எனக் குறிப்பிட்டிருந்ததால் அது ஒரு பெரிய விலகலாக குறிப்பிடப்பட்டு கேள்வி நிராகரிக்கப்பட்டு இரண்டாவது குறைந்த விலையைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு கேள்வி வழங்கப்பட்டது, ஆனால் அந்நிறுவனம் 76 நாட்கள் தாமதத்திற்குப் பிறகு கட்டளையை முடித்திருந்ததுடன், தாமதக் கட்டணங்கள் எதுவும் அறவிடப்படவில்லை. தொழில்நுட்ப ஆலோசனைக் குழு அறிக்கையின் பிரகாரம் தொடர்புடைய பொருட்கள் 2024 திசெம்பர் -6 0ஆந் திகதி பரீட்சிக்கப்பட்டதாகவும், விவரக்குறிப்புகள் மற்றும் மாதிரிகளுடன் பொருந்தியதால் பணம் செலுத்தத் தகுதியுடையவை என்று பரிந்துரைக்கப்பட்ட போதிலும் ரூபா 5,921,712 பெறுமதியான | பதிலளிக்கப்பட்டிருக்க விலலை. | முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு பெறுகை நடவடிக்கைகளிலிருந்து விலகி மற்றும் பரீட்சிக்காமல் கொடுப்பனவு மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் அரசிற்கு நட்டம் ஏற்பட்டிருந்தால் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பொருட்கள் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவால் பரிசோதனை செய்யப்படாமல் வெளிக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தன. 2024 திசெம்பர் 24 ஆந் திகதிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு அறிக்கையின் பிரகாரம் தொழில்நுட்பக் குழுவிலிருந்து ஒருவர் மாத்திரமே பௌதீக இருப்பு பரிசோதனையில் பங்கேற்றார். இந்தக் கேள்வியை உற்பத்தி கம்பனியொன்றிற்குப் பதிலாக ஒரு இடைத்தரகர் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. ரூபா 14,214,917 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட குழாய்கள் நியம (SLS) தரத்தில் இல்லை என்பது ஆய்வுகூட அறிக்கையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. தங்காலை, மீரிகம மற்றும் அம்பன்பொல ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளின் 05 கிராம சேவையாளர் பிரிவுகளில், விநியோகிக்கப்பட்ட அனைத்து GI குழாய்கள் மற்றும் கம்பிகள் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படாமல் வீடுகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் சில வெளிக்களத்தில் பொருத்தப்பட்டிருந்ததுடன் சிலவற்றை வீடுகளில் பாதுகாப்பற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் வழங்கப்பட்ட GI குழாய்கள் 03 வாரங்களுக்குள் துருப்பிடித்திருப்பதும் அவதானிக்கப்பட்டது. இந்தத் திட்டம் ஆரம்ப முதல் திட்டமிடல், பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பது மற்றும் பின்தொடர்தல் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படாததால் இத்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த அதன் நோக்கங்களை அடைய முடியாமல் இருந்தது.